கக்கூடிய கருத்தாக படவில்லை. இந்த தேசிய மாணவர் படை மூலம் கிடைக்கக்கூடிய பயிற்சி அதிகப்படியான மாணவர் களுக்கு கிடைக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள் கிறது. எல்லா மாணவர்களுக்கும் கொடுத்தால் கூட இந்த அரசு மகிழ்ச்சி அடைகிறது. அதற்கு பயிற்சி தரவேண்டிய பொறுப்பு என்.எஸ்.எஸ். டைரக்ட்டரேட் வசம் இருக்கிறது. அது ஒரு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அமைப்பாகும். ஆகவே அவர்கள் அகில இந்திய அளவிலே தான் இந்த ஒதுக்கீட்டை செய்து கொண்டு வருகிறார்கள். நாம் அதிகம் கேட்கிறோம் அவர்கள் கொடுத்தால் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு முயற்சியை மேற்கொள்வோம்.

பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கான நீதிமன்றங்கள்.

வினா எண் 633: திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரணைசெய்ய குற்றவியல் நீதி மன்றங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடமுள்ளதா ?

(ஆ) மாவட்டங்கள் ரீதியில் அவைகள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெண்களுக்காக குற்றவியல் நீதிமன்றங்கள் ஏற்படுத்தும்போது ஜட்ஜ்களாக இருக்கிறவர்கள் பெண்களாக நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் பெண்களாகத் தான் இருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை; அதற்கு சாத்தியக்கூறும் இல்லை. பெண்கள் நீதிபதியாக இருக்கிற பகுதிகளிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்,

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு அவர்களை காவல் நிலையங்களிலிருந்து அழைத்துச் செல்லும்போது பெண் காவலர்களை வைத்து அழைத்துச் செல்லப்படுமா ? அதேபோல

விசாரணைக்காக கோர்ட்டுகளுக்கு அழைத்து செல்லும் பெண் காவலர்களுடைய காவலில் இருக்க அனுமதி தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கு தனி கோர்ட் அமைக்கவிருப்பதாகசொல்லியிருக்கிறார்கள். பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இன்-கேமரா முறையிலே விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்-கேமரா முறையை பொறுத்தவரையில் ஏற்கனவே சட்டத்திலே வழிவகை இருக்கிறது. It is left to the diseretion of the Judiciary [அது டிஸ்கிரிஷன் என்ற அளவிலே இருக்கிறதால் பல இடங்களில் பெண்களே முன் வந்து பெண்கள் சார்பிலே வழக்குரைஞர்களை வைத்து இன்-கேமரா முறையிலே விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் அந்த முறையிலே விசாரிக்கலாம். அவ்வாறு கேட்கவில்லையென்றால் நடக்காமலும் போய்விடுகிறது. உயர்நீதிமன்றத்தோடு அரசு இதுபற்றி கலந்து இன்-கேமராவிலே முடிந்த அள்விற்கு அதிகப்படியான பெண்கள் வழக்குகளை நடத்துவதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று அரசு கேட்கும்.

(முற்பகல் 9-20)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிதுறை மற்றும் எல்லாத் துறைகளிலும், பெண்கள் அதிக அளவில் புகுத்தப்படுவதால், 'ஆரவல்லி இராஜ்யம்' ஏற்பட்டு, பெண்களுக்கு ஆண்கள் அடிமை என்ற அபாயம் ஏற்படாத என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குத் தேவையான பிரதிநிதித்துவமே இல்லை என்பதுதான் குறையாக இருக்கிறது.